ஸ்ரீஹரி:

# ஏழை எளியோரிடம் நமது கடமைகள்

ACL-FTS
00225

எழுதியவர்:

ஹனுமான்பிரஸாத் போத்தார்

வெளியிடுவோர்:

கீதா பிரஸ், கோரக்பூர்

பிரசுரிப்போர்:
கனசியாம்தாஸ் ஜாலான்,
கீதா பிரஸ், கோரக்பூர்

முதற் பதிப்பு: மார்ச் 1956
8000

விலை அணா ஒன்று

அச்சிட்டவர்:
ஹிந்தி பிரசார பிரஸ், சென்னை-17

THE MADURA TAMIL SANGAM

ஸ்ரீ பரமாத்மனே நம:

# ஏழை எளியோரிடம் நமது கடமைகள்

கடவுள் துன்பப்பட்டவர்களுடைய துன்பத்தைப் போக்குபவர், தீனபந்து; தீனர்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய நண்பர். சக்தியற்றவர்கள், திறமையற்றவர்களே தீனர்கள் எனப்படுவோர். எவனிடத்தில் யாதொன்றும் செய்வதற்குக் சக்தி கிடையாதோ, எவனிடம் எக்காரியத்தைக் செய்வதற்கும் சாதனங்கள் கிடையாதோ, எவன் பலவீனனே, யாதொரு வசதியும் இல்லாதவனே—அப்படிப்பட்ட யாராயிருந்தாலும் அவனுடைய உள்ளத்தின் அபயக்குரலை மிக எளிதில் பகவான் கேட்கிறார். எளியோரை யார் ஏற்றுக்கொள்வார்கள்? உலகத்தில் எளியோரிடம் சகஜமாகப் பழகி, அன்பு செலுத்தி, அவர்களை மதிப்பவர்கள், அவர்களை ஏற்றுக்கொள்பவர்கள் இருவரே இருக்கின்றனர்—ஒருவர் கடவுள், மற்றொருவர் சாது மஹாத்மாக்கள். இந்த மாதிரி எளியோரிடம் அன்பும், எளியோரிடம் நட்பும் வாத்ஸல்யமும் பகவானிடமும் சாதுக்களிடமுமே காணப்படுகின்றன. இது மிக உயர்ந்ததோர் குணம். இந்த குணம் யாரிடமாவது காணப்படுமானல் அவனுடைய வாழ்க்கை பெரும் பாக்கியம் பொருந்தியதெனச் சொல்லப்படும். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் ஓர் தாய் குழந்தைகளிடம் அன்பு பூண்டவளாக இருக்கிறாள்; மேலும்

'நான் குழந்தைகளுக்குப் பெரிதும் நன்மை செய்கிறேன்' என நினைத்து அவள் தன் மனதில் கர்வம் கொள்வதில்லை; அவளுடைய வாத்ஸல்யம் (மக்களிடமுள்ள அன்பு) அவளைத் தன் குழந்தைகளைப்பேணிவளர்த்துப் பணிவிடை செய்ய அவளைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த 'மக்களன்பின்' பேரில் குழந்தைகளுக்கு இயற்கையான உரிமை உண்டு. தாயாரின் அந்த அன்பு மக்களின் சொத்தாகும். அவளிடம் உள்ள அந்த அன்பு மக்களின்பொருட்டாகவே உள்ளது, இல்லாவிடில் அந்த அன்பு அர்த்தமற்றதாகக் கருதப்படும். இதே போல, எளியோரிடமும், அனாதைகளிடமும், துக்கமடைந்தவர்களிடமும் கடவுளும் சாதுக்களும் தமக்கே இயற்கையான இரக்கம் பொருந்திய அன்பு காட்டுகின்றனர். அவர்கள் காட்டும் தயையும் இரக்கமும் ஏழைகள், அனாதைகள், துன்பப்பட்டவர்கள் ஆகியோரது சொந்தச் சொத்தாகும். ஏழைகள் பால் இயற்கையான அன்பு கொள்பவர்களது சுவபாவமே இதுதான்; இந்த இயற்கையான அன்பு எப்பொழுதும் அவர்களது இதயத்தில் இருந்து வருகிறது. அவர்கள் தாம் யாருக்கும் உபகாரம் செய்வதாகக் கருதுவதில்லை, தாம் எந்த எளியோன் பேரிலும் தயை கூர்ந்து ஏதாவது அளிப்பதாகக் கருதுவதில்லை; அவர்கள் தமதாக எதையும் கருதுவதில்லை. அவர்கள் தமது என எதுவும் இல்லையென்றும் தம்மிடம் இருப்பது யாவும் பகவானுடையது, கல்வி, புத்தி, பலம், பொருள், ஐசுவரியம், நிலம், வீடு எல்லாமே பகவானுடையது என்றுமே கருதுகிறார்கள். ஆகையால் அந்த யாவற்றையும் இடைவிடாது ஈசுவரனுடைய சேவையில், ஈசுவரனுடைய வேலைகளின் பொருட்டு ஈடுபடுத்துவது அவர்

களுடைய இயற்கையான சுவபாவமாகிவிட்டது. ஆகை யால், அவர்கள் எளியோர் பால் காட்டும் பரிவு எளியோர் களுக்குச் செய்யும் உபகாரமல்ல, ஈசனுக்குப் புரியும் தொண்டே ஆகும்; ஈசனுக்குச் சொந்தமான அவனுடைய வஸ்துவை அவனுக்கே அர்ப்பணிப்பதாகும். இந்த எண் ணத்திற்கு நேர் மாருக எவனொருவன் அந்த வஸ்துக்களைச் சேகரிக்கிருனே, அந்த வஸ்துக்களைத் தனதாகக் கருதி அவைகளின் பேரில் தனது உரிமை, அதிகாரம் செலுத்து கிருனே, மேலும் அவைகளை ஈசனுக்கு அளிப்பதில்லையோ அவன் கள்வன். எவன் ஈசனுடைய சொத்தைத் தனதாக நினைத்துத் தன் உபயோகத்துக்கு எடுத்துக் கொள்கிருனே அவன் திருடன், தண்டனை பெறத் தகுந்தவன். ஸ்ரீமத் பாகவதத்தில் நாரதமுனி சொல்லியிருக்கிருர் :—

यावद् भ्रियेत जठरं तावद् स्वत्वं हि देहिनाम् ।
अधिकं योऽभिमन्येत स स्तेनो दण्डमर्हति ॥ (௭-௧௪-௮)

'எந்த அளவினுல் வயிறு நிரம்பமுடியுமோ, எளிய தான வாழ்க்கை நடைபெற முடியுமோ அந்த அளவின் பேரில்தான் நமக்கு அதிகாரம் உண்டு. எவன் அதற்கு அதிகமான அளவின் பேரில் அதிகாரம் கொள்கிருனே, சேகரிக்கிருனே, அவன் மற்றவர்களது சொத்தின் பேரில் உரிமை கொள்ளும் திருடனுவான், தண்டனைக் குரியவனு வான்.'

இந்த எண்ணத்தோடு தன்னுடைய சகல விதமான பொருள்களின் பேரிலும் விஸ்வ ரூபமான பகவா னுக்கே அதிகாரம் உண்டு எனக் கருதி எங்கெல்லாம் எளி யோர், துன்புற்றவர், தேவைப்பட்டவர், திறமையற்றவர்,

சக்தியற்றவர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தேவைப்படும் பொருள்களின் மூலம் அவர்களுக்குத் தொண்டு புரிவதே தர்மமாகும்.

மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு விஷயம் அவசியம் இடம் பெறவேண்டும்—அது யாதெனில், தன்னிடமுள்ள கல்வியறிவு, பணம், பொருள், நிலம், வீடு, உடல், மனம், புலன் இவைகளால் எங்கெல்லாம் யார் யாரது தேவைகள் பூர்த்தியாகுமோ அங்கெல்லாம் அவைகளை ஈடுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இதுவே புண்ணியம், சத் கர்மமாகும். ஆனால், எங்கு தனக்கெனச் சொத்துச் சேமிக்க எண்ணம் தோன்றுகிறதோ, சொத்துச் சேர்த்து எஜமானப் பதவி வகிக்க இச்சை தோன்றுகிறதோ, உலகத்திலுள்ள வஸ்துக்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அவைகளை 'என்னுடையது' என்று ஆக்கிக் கொள்ள விருப்பமும் முயற்சியும் உண்டாகிறதோ அங்கேயே பாவம் உதயமாகிறது. உலக ஐசுவரியத்தைச் சேமிக்கா திருத்தல் புண்ணியம், சேமித்தல் பாவமாகும்.

நாம் நமது நிலைமையை, நமக்குக்கிடைத்த சாதனங்களை, வஸ்துக்களை நல்ல விதத்தில் உபயோகப்படுத்தக் கற்றுக்கொள்வது நமது இயற்கையாக இருக்கவேண்டும். சேமிக்கப்பட்ட பொருள் தாம் அனுபவிப்பதற்காகவும் அப்படியே சேரும்படி விட்டு வைப்பதற்காகவும் அல்ல. ஜலம் எங்காவது ஒரே இடத்தில் தங்கிவிடுமானால் அழுக் கடைந்து அதில் புழுக்கள் உண்டாகிவிடும். இதேமாதிரி உபயோகமற்றுக் கிடக்கும் பொருளும் மாசுபெற்று விடுகின்றது.

மாமிசம் மட்டுமே உண்ணத்தகாத வஸ்து என்ப தில்லை. மற்றவர்களுடைய உரிமையைப் பறித்துச் சாப் பிடுவதும் உண்ணத்தகாத உணவேயாகும். எவ்விதத் திலும் பிறர் வஸ்துவைத் தனதாக்கிக் கொள்ளுதல் பாவமே. ஒரு அரசனிடம் ஒரு சாது வந்தார். பேச்சின் நடுவிலேயே தனக்கு உரிமையான உணவு என்பதைப் பற்றிப் பேச்சு எழுந்தது. அரசன் கேட்டான், 'ஐயா, தனக்கு உரிமையான உணவு என்பது எது?' சாது சொன்னார்—'உங்களது நகரத்தில் ஒரு கிழவி இருக்கிறாள், அவளிடம் சென்று கேளுங்கள்.' அரசன் கிழவியிடம் சென்று, 'தாயே! எனக்கு உரிமையான உணவு வேண்டும் என்று தெரிவித்தான்.

கிழவி சொன்னாள்—'அரசே! என்னிடம் ஒரு ரொட்டி உள்ளது. ஆனால் அதில் பாதி உரிமை ரொட்டி, பாதி உரிமையற்றது' அரசன் கேட்டான்—'பாதி உரி மையற்றது என்பது எவ்வாறு?'

கிழவி கூறினாள்—'ஒரு நாள் நான் நூல் நூற்றுக் கொண்டிருந்தேன். மாலை நேரம், இருட்டாகி விட்டது. அந்நேரத்தில் அவ்வழியே ஓர் ஊர்வலம் வந்தது. ஊர்வலத் தில் தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. நான் அந்தத் தீவட்டி வெளிச்சத்தில் பாதியளவு பட்டையை நூல்நூற் றேன். அந்தப் பாதிப் பட்டையால் நூற்ற நூலைக் கொண்டு மாவு கொணர்ந்து ரொட்டி செய்தேன். ஆகையால் பாதி ரொட்டி தான் உரிமையுள்ளது, எஞ்சிய பாதி உரிமை யற்றது. அதன் பேரில் அந்த ஊர்வலத்தினருக்கே உரிமை யுண்டு.'

இதுதான் உரிமை உணவின் விஷயம். வேறு யாருடைய உரிமைச் சொத்தும் நம் வீட்டிற்குள் வந்துவிடுதல் கூடாது. இதை நல்ல ஜனங்கள் பெரிய பாவமாகக் கருதி வந்தனர். வேறு யாருக்காவது சொந்தமான வஸ்து நம் வீட்டிற்குள் வந்து அதை நாம் வைத்துக்கொண்டு விட்டோமானால் நாம் திருடினவராகிறோம், பாவம் புரிந்தவராகிறோம்.

இந் நாட்களில் இந்த விஷயத்தைப்பற்றிக் கவனம் கொள்வதே கிடையாது. ஜனங்கள் எம் முறையிலாவது பொருள் ஈட்டி அப்பொருள் மீது தமது சொந்தம் கொண்டாடுகிறார்கள்; பிறருடைய உரிமை நலனைப்பற்றிக் கருதுவதேயில்லை. இவ்வாறு செய்பவர்கள் முற்றிலும் பாவமே புரிகின்றனர். ஒரு சாதுவானவர் என்னிடம் ' இந் நாட்களில் நாம் யார் வீட்டு அன்னம் புசிப்பது? யார்தான் உண்மை நாணயம் படைத்தவர்?' எனச் சொன்னார். நாம் உட்கொள்ளும் அன்னம்போல் ஆகிறது மனமும்.' அன்னத்தை அனுசரித்தே மனமும் அமைகிறது. நமது வருவாயின் முறையை அனுசரித்தே அன்னமும் அமைகிறது. சுத்தமான, சாத்வீகமான உணவு சுத்தமான இடத்தில் தயார் செய்யப்பட்டு, சுத்தமான மனிதர் மூலம் பரிமாரப் படுமானால் அது உயர்ந்தது. சுத்தமான இடம், சுத்தமான ஜனங்கள் தொடுதல் இவை இதில் முக்கிய காரணங்கள். ஆனால், மற்றச் சுத்தங்களை விட முக்கியமானதோர் அசுத்தம் வஸ்துக்களில் இருந்துவிடுகிறது. அதுதான் பணத்தைப்பற்றிய அசுத்தம். திருட்டு மூலம், நேர்மையற்ற வருவாய்கள் மூலம் கிடைத்த அன்னம் எப்பொழுதும் அப

வித்திரமானதுதான். இதே மாதிரி, சுத்தமும் நேர்மையான வருவாயைப் பொருத்தே இருக்கிறது. ஆதலால் நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்னவென்ருல், யாரிடம் என்ன இருந்தாலும் அது முழுவதும் பிறர் நலன் பொருட்டே உள்ளது, அதாவது எல்லோருக்கும் சேர்ந்து பொதுவானது. அது எல்லோருடையதுமாகும், எல்லோருக்கும் அதில் பங்கு உண்டு, 'எனது' இல்லை. எங்கெங்கெல்லாம் அப்பொருள் தேவைப்படுமோ அங்கெல்லாம் அதை சிரத்தையுடனும், மதிப்புடனும், நல்லெண்ணத்துடனும், தாராள மனதுடனும், நேர்மையுடனும் உபயோகித்து வருவது கடமையாகும்.

யாருக்காவது நீங்கள் கொஞ்சம் அதிகமாகவே, ஒரு ரூபாய்க்கு பதிலாக ஐந்து ரூபாய் கொடுத்தாலும், அவனை அதட்டி அவமானப்படுத்திக் கொடுப்பீர்களானுல், அதனுல் அவனுடைய மனது சிறிதும் சந்தோஷமடையாது, சுகம் பெருது. தாழ்மையும் இனிமையும் பொருந்திய சொல் மிகவும் தேவை. ஒவ்வொருவருடைய இருதய கமலத்தையும் மலரச் செய்யும்படிப் பேசுவதுதான் உண்மையான சொல். சொல்லின் கடுமையினுல் நீங்கள் யாருடைய மனதை வேண்டுமானுலும் வேதனைப்படுத்தலாம். அவமானச் சொற்கள் நிறைந்த, அலட்சியம் நிரம்பிய, வெறுப்புக் கலந்த, கடுமையான சொற்களால் எவ்வளவு ஆழ்ந்த புண் எளியோர் மனதில் ஏற்படுகின்றதோ அவ்வளவு புண் பணவலிமை பெற்றவர்களுடைய மனதில் ஏற்படுவதில்லை. நல்ல தேக ஆரோக்கியம் படைத்தவனும், நல்ல தசைகள் உள்ள உடலுறுதி

பெற்றவனுமான ஓர் பயில்வானை நீங்கள் முஷ்டியால் குத்த விரும்பினால்—முதலாவது அவனை அவ்வாறு குத்த நீங்கள் தைரியம் கொள்ளமாட்டீர்கள்; ஒருக்கால் அவ்வாறு குத்தினாலும்—உடனே உங்களுக்கு இரு மடங்கு வேகத்தோடு அதற்குப் பதிலும் கிடைக்கக்கூடும். உங்களுடைய முஷ்டிக் குத்து அவனுக்கு உறைக்கவும் உறைக்காது, அவன் சகித்துக்கொண்டுவிடுவான். ஆனால் யாராவது ஒரு பலஹீனமானவனை அவ்வாறு குத்தினால், பாவம், அவன் துடிதுடித்துவிடுவான், வலி பொறுக்கமாட்டான், கோபமும் கொள்வான்.

யாராவதொரு பெரிய மனிதனை நீங்கள் ஏதாவது சொன்னாலும்கூட அவன் அதைப் பொருட்படுத்தவும் மாட்டான், அதற்குச் செவிசாய்க்க மாட்டான். ஏனென்றால் அவனைப் புகழ்வோர் பலர் இருப்பார்கள். அவனது புகழ்ச்சியின் முரசொலியில் உங்களுடைய தூஷணையின் தொனி கேளாது மங்கிவிடும். ஆனால் அதே விஷயத்தை நீங்கள் ஒரு ஏழையைக் குறித்துச் சொல்வீர்களானால் அவனுக்கு அது இதயத்தில் தைப்பதுபோல் இருக்கும், அவன் மிகவும் மனக்கிலேசமடைவான். ஆகையால் ஒருவனது ஆபத்துக் காலத்தில் அவனிடம் நூறு மடங்கு சினேகம் காண்பிந்தாலும், அது ஒரு மடங்கு சினேகம் போலவேதான் இருக்கிறது. ஏழை எளியோரின் துன்பம் அவர்களை மிகவும் வாட்டி அழுத்துகிறது. அவர்களது இதயம் இரவும் பகலும் அழுகின்றது. எளியோனின் மனதுக்குள்ளேயே கண்ணீர் பெருக்கெடுக்கின்றது, ஆனால் அவன் அதை வெளிப்படுத்தமுடியாமல் மறைத்துவைத்துக்

கொண்டிருக்கிறான். சிற்சில சமயம் அவன் மனதிற்குள்ளேயே வலியால் முனகிக்கொள்கிறான், அழுதுகொள்கிறான். ஜனங்களுடைய அதட்டலுக்கு, அவமானத்துக்குப் பயந்து தன் துக்கத்தை வெளியே தெரியப்படுத்தாமல் இருந்துவிடுகிறான். அவனது சுவபாவமே மாறிவிடுகிறது, ஏனென்றால் உலகத்தில் அவனைக் கவனிப்பவர், அவன் குறைகளைக் கேட்பவர் யாரும் இல்லை. இவ்விஷயம் அவன் மனதில் இருந்து அவனை அழுத்துகின்றது. ஆகையால் எவன் அவனுடைய கண்ணீரைத் துடைத்து அவனிடம் இரக்கம் காட்டுவானோ, ஆறுதல் கூறுவானோ அவனே நல்லவன், மேலானவன். ஏழை சொல் கேட்பவன், எளியவன் துயர் நீக்குபவன், அவனுடைய மனதில் அழுந்தியிருக்கும் வேதனையைத் தன்னால் முடிந்தமட்டும் நீக்க முயலுபவனே மனிதன்.

ஈசுவரன் தன்னை எல்லா உயிர்களுக்கும் நண்பன் எனக் கூறியிருக்கின்றான். **'सुहृदं सर्व भूतानाम् ।'** ஈசுவரன் பக்தர்களுக்கும், சாது மகாத்மாக்களுக்கும் மட்டும் நண்பனாயிருந்தால் அவனுக்கு யாதொரு பெருமையும் இருந்திருக்காது. அது வெறும் கொடுக்கல், வாங்கல் விஷயமாக, தன்னலம் பொருந்திய விஷயமாக ஆகிவிடும். ஆனால், கடவுள் எல்லோருக்கும் நண்பன், எளியோருக்கும், அநாதைகளுக்கும் கூட நண்பன் என்பதில்தான் அவனுக்குப் பெருமை உள்ளது. கடவுளினுடைய இந்த குணம் எல்லோருடைய சொத்தாகும், குறிப்பாக எளியோருடைய சொத்தாகும். இதே மாதிரி எல்லா நல்ல மனிதர்களுடைய குணமும் ஏழை எளியோருடைய சொத்தாகக்

கருதப்படவேண்டும். யார்யாரிடம் எந்தெந்த மாதிரியான ஐசுவரியம் இருந்தாலும் அதை இரக்க மனப்பான்மை யோடு, தோழமை மனப்பான்மையோடு, நல்லெண்ணத் தோடு, யாதொரு வித்தியாசமுமில்லாமல் அன்போடும் ஆதரவோடும், பணிவோடும் ஏழை எளியவர்களின் இன் னல்களை நீக்கும் பொருட்டுச் செலவு செய்யவேண்டும். ஏழை எளியோரின் தொண்டிற்காகக் கடைவிரித்துக் கொண்டு உட்கார வேண்டிய அவசியமில்லை; 'நான் ஏழை களுக்குத் தொண்டு செய்யப்போகிறேன்' என்று விளம் பரப்படுத்தவேண்டியதில்லை. இம்மாதிரியான விளம்பரம் ஏழைகளை மிகவும் லஜ்ஜைக்குள்ளாக்குகிறது, அல்லது அவர்களது மனதில் மிகுந்த வேதனை உண்டுபண்ணுகிறது. எளியோரின் துயரைப் போக்க மனதில் ஓர் தீவிரமான ஆவல் இருக்கவேண்டும். அவர்களுடைய துயரைப் பார்த்துத் தன் மனத்தில் ஓர் தீவிரமான வேதனை எழ வேண்டும், அந்த வேதனை ஏழை எளியோரின் துயரைத் துடைத்த பின்னரே தணிவதாயிருக்கவேண்டும்.

உண்மை யாதெனில், ஏழை எளியவர்களிடம், துன் பப்பட்டவர்கள் பேரில் கடவுளுக்கு அலாதியான கிருபை உண்டு. அவர்கள் கடவுளை சீக்கிரம் அடையமுடியும். துய ரடைந்தோரும், எளியோர்களும் கடவுளது விசேஷித்த அன்புக்குப் பாத்திரர்களாயிருப்பது ஏனென்றால் அவர்க ளிடம் மோஹவலையில் சிக்கவைக்கும் வஸ்துக்கள் கிடை யாது. அவர்களது மனதை மோஹவலையில் ஆழ்த்தும் சக்தி கள் அவர்களை விட்டுத் தூர விலகிவிட்டன. ஆனால், உலகத் தில் யாரிடம் ஏதாவது கொஞ்சம் பொருள் இருக்கின்

றதோ, அவர்கள் அந்த வஸ்துவை ஏழை எளியோர்களுக்கும் உரித்தானதாக ஆக்கி, இரக்க மனப்பான்மையோடு அவர்களுடைய துக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அவர்களுக்கு ஏற்பட்ட துக்கமும் பகவானுடைய மங்களமயமான ஏற்பாட்டினுல் தான் வந்தது, அது நீங்குவதும் அந்த பகவானுடைய மங்கள மயமான எண்ணத்தினுல் தான் ஈடேறும். நீங்கள் அவர்களுடைய துன்பங்களை நீக்கமுடியாது, ஆனுல் அவர்களது துன்பத்தை நீக்க முயற்சிப்பதில் உங்களுக்கு நன்மையே ஏற்படும்; ஏனெனில், நீங்கள் அத்துன்பங்கள் நீங்குவதற்கு நிமித்தமாவீர்கள். ஆதலால் யாராவது நம்பிக்கை இழந்திருந்தால் நீங்கள் அவர்கள் மனதில் நம்பிக்கை ஊட்டுங்கள்; வழி தவறியோருக்கு வழி காட்டுங்கள், மூழ்குவோரைக் கரையேற்றுங்கள், அழுவோரின் கண்ணீரைத் துடையுங்கள்.

இது மட்டுமல்ல, துன்புற்றவனின் துன்பங்களைச் செவி சாய்த்துக் கேட்டால் மட்டுங்கூட அவனுக்குப் பெரிதும் ஆறுதல் ஏற்படும், அவனுடைய மனதில் சுகம் தோன்றும். அவன் எனக்கும் உற்றூர் இருக்கின்றனர் என எண்ணுவான். எவர்களுக்கு யாதொரு உற்றூரும் இல்லையோ அவர்களுக்கு நீங்கள் உற்றூராகி விடுங்கள், அப்பொழுது அவர்களுடைய மனதில் ஓர் இனிய சுகம் பொருந்திய உணர்ச்சி உண்டாகிறது. ஒருவரைப் புகழக் கூடியவர்கள் பலபேர் எவர்களுக்கு இருக்கிறூர்களோ அவர்களை நீங்கள் புகழ்ந்தால் ஒன்றும் சோபிக்காது. ஆனுல், கவனிப்பவர் யாரும் இல்லாமல், ஆதரவற்று,

கதியற்று, துணையற்று ஓர் மூலையில் கிடக்கும் ஓர் ஏழையி னருகில் நீங்கள் சென்று அமருவீர்களானால் அதிலேயே அவனுக்கு மிகுந்த சாந்தி ஏற்படும். அவன் ஆஹா, என்னையும் யாரோ விசாரித்தார்களே என நினைத்து மகிழ்வான்.

ஒரு தீராத குஷ்டரோகி இருந்தான். அவனுடைய தேகம் முழுவதிலிருந்தும் புழுக்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவன் பெரிய பிடிவாதக்காரனாகவும் நாஸ்திகனாகவுமிருந்தான். புகழ்பெற்ற செயின்ட் பிரான்ஸிஸ் அவனருகில் சென்றார். ஆனால் அவன் அவரைத் திட்டத் தொடங்கினான். ஏனென்றால், அப் பக்கமாகச் செல்பவர்கள் அவனைக் கண்டதுமே அவனைத்திட்டி வெறுப்பால் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். ஆகையால் அவன் எல்லா ஜனங்களுமே என்னை வெறுப்பவர்கள் தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். ஆனால் பிரான்ஸிஸ் மஹான் அவனுடைய வசவுகளைப் பொருட்படுத்தாமல் முன்னே சென்று அவனருகில் போய் மிகவும் வினயத்துடன்—"சகோதரா! நீ என்னை என்ன வேண்டுமானாலும் திட்டிக் கொள், அடி; ஆனால் நான் உன்னிடம் அவசியம் வரத்தான் வருவேன். நான் உனது புண்களைக் கழுவி அவைகளின் மேல் துணிகட்டி உனக்கு எல்லாவிதத்திலும் பணிவிடை செய்வேன்." எனச் சொன்னார். பிரான்ஸிஸ் மஹானின் இவ் வார்த்தைகள் அந்தக் குஷ்டரோகியின் மனதைக் குளிரச் செய்தன. அவனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று, ஆறுதல் ஏற்பட்டது. பிரான்ஸிஸ் மஹான் அவனுக்குத் தொண்டுகள் புரிந்து அவனுடைய

வாழ்க்கையில் சுகம் ஏற்படச் செய்தார். கிருஸ்தவர்களில் இம்மாதிரி ஏழைகளின் துன்பத்தைப் போக்குவதற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் செலவுசெய்த பெரிய மஹான்கள் இருந்திருக்கிறார்கள்.

எலிஜபெத் மஹாராணியார் அரண்மனையை விட்டு வெளிவந்து ஏழை எளியவர்களின் குடிசைகளுக்குச் செல்வாள். அங்கே தன் சரீரத்தாலும் மனதாலும் பொருளாலும் ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வாள். ஏழைகளைச் சுகமாக வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

நீயும் உனது துக்கத்தைப் பொருட் படுத்தாதே, ஆனால் மற்றவர்களுடைய துக்கத்தை ஒருபொழுதும் மறவாதே. ஈசுவரன் யாரிடமும் துவேஷம் காட்டாமலும் எல்லோருடனும் ஸ்னேகப் பான்மையுடனும் இருக்குமாறு தான் நமக்குப் பணித்திருக்கிறார். (अद्वेष्टा सर्वभूतानां मैत्रः ..)

தோழன் தன்னுடைய மலைபோன்ற துன்பத்தைத் தூசிபோலக் கருதித் தனது தோழனுடைய தூசிபோன்ற துன்பத்தையும் மலைபோலக் கருதுகிறான். துன்புற்றவனின் துன்பத்தை ஒருபோதும் அலட்சியம் செய்யவே செய்யாதே. அவனது சிறிதளவு துன்பத்தையும் மிகப் பெரியதாகக் கருதி அதை விலக்க முழு முயற்சியும் செய். தன் நன்மைக்காகப் பிறருக்குத் தீங்கு விளைவித்தலோ மிகப்பெரிய பாவம்.

ஒரு தனவந்தன் ஒரு வீடு கட்டினான். அந்த வீட்டுக்கு அடுத்தாற்போல் ஓர் கிழவியின் குடிசை இருந்தது. அவ

னுடைய நண்பர்கள் இந்தக் கிழவியின் குடிசை இருக்கும் இடமும் கிடைத்துவிட்டால் உன் வீட்டை நீ இன்னும் பெரிதாகவும் அழகாகவும் கட்டலாம் என ஆலோசனை கூறினார்கள். தனவந்தன் இதை ஏற்றுக்கொண்டான். இந்த விஷயம் கிழவிக்குத் தெரிந்தது. அவள் தனவந்த னிடம் வந்து, 'அப்பனே, நீ பெரிய மனிதன், நீ என் பக்கத்து வீட்டுக்காரனாயிருப்பதால் எனக்கு ஏதாவது உதவி செய்வாய், எனது கண்ணீரைத் துடைப்பாய், உன் னால் எனக்குச் சுகம் கிடைக்கும் என நினைத்தேன். ஆனால் நீயோ எனது இந்தச் சிறிய, என் குழந்தையின் அப்பன் பாட்டனின் குடிசையைக் கூடக் கண்டு சகிக்காதவனா யிருக்கிறாய். அதனால்தான் இந்தக் குடிசையைப் பிய்த் தெறிந்துவிட விரும்புகிறாய். இப்படிச் செய்யாதே. இது என் மூத்தோர்களின் அடையாளம். இதை அழித் தால் நீ சுகமாயிருக்கமுடியாது. கடவுள் உனது இந்த அநியாயத்தைக் கண்டு சகிக்க மாட்டார்' என்று முறை யிட்டாள். தனவந்தன் புத்திமான். அவன் விஷயத்தைப் புரிந்துகொண்டான், கிழவிக்கு ஆறுதல் கூறி அவளது குடிசையை எடுத்துக்கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டான்.

ஒரு பலவான், நல்ல நிலைமையிலிருப்பவன் ஓர் ஏழை யின் பேரில் ஆக்ரமித்தால் பாவம் அவன் என்ன செய் வான்? ஐந்து வயதுள்ள ஒரு சிறிய சக்தியற்ற பாலகனைப் பத்து மனிதர்கள் சூழ்ந்துகொண்டு அடிக்கத் தொடங்கி னால் அவன் என்ன செய்வான், எப்படித் தப்புவான்! ஏழை எளியவர்களை, சக்தியற்றவர்களை பலவான்கள் துன்

புறத்திஞல் அவர்கள் யாரிடம் சென்று முறையிடுவார் கள்? அவர்கள் பேசவும் முடியாது இருந்துவிடுகிருர்கள். அவர்களுடைய உள்ளம் கதறுகிறது. அவர்களுடைய இதயத்தில் நெருப்பு எரிகிறது. அந்த நெருப்பின் பொறி, அந்தத் துன்பமடைந்த இதயத்தின் ஓர் பெருமூச்சு பல வானின் பலம் முழுவதையும் தவிடு பொடியாக்கி அவனை முற்றிலும் அழித்து விடுகிறது. கவனம் வைத்துக் கொள், ஏழையை ஒரு போதும் ஏளனப் படுத்தாதே, கதிற்றவர் களை ஒரு போதும் கஷ்டத்துக்குள்ளாக்காதே. பலமற்ற வர்கள் பேரில் நீ உன் பலத்தைப் பிரயோகிக்காதே, அவர்களுக்கு ஏதாவது ஆசைகள் காட்டி அவர்களது உள்ளத்தைப் பாழ் படுத்தாதே. கிழவிக்கு அந்தச் செல் வந்தன் ஓரிரண்டு ஏக்கர் நல்ல நிலம் கொடுத்திருக்கலாம். ஆனல் அவளுக்குத் தன் குடிசையின் பேரில் இருந்த பிரியம்—அதற்கு அவன் என்ன செய்ய முடியும்? அவன் கொடுக்கும் ஓரிரண்டு ஏக்கர் நிலம் அவளுக்குச் சுகம் தராது. எனது பலவீனத்தை அறிந்து என்னை இம் மாதிரி வஞ்சித்து விட்டான் என்று அவள் நினைப்பாள். அவளைப்போன்ற நிலைமையில் நீங்கள் இருந்திருந்தால் உங்கள் மனது என்ன பாடு பட்டிருக்கும் எனச் சிந்தித் துப்பாருங்கள்.

தன்னுடைய சக்தியை ஒருவன் எளியோர்களுக்கு உதவி புரிவதில் செலவு செய்யவேண்டும். ஏழை துர்ப் பலன் நாசமாகி அழிந்துபோகும்படியான காரியம் ஒரு போதும் செய்யக்கூடாது. உங்களைப் போலவே சக்தி படைத்தவனிடம் நீங்கள் ஏதாவது செய்தால் அதுவாவது

பரவாயில்லை என்னலாம். அங்கும் கூட ஒருவர் மற்றவ ரோடு சண்டை புரிவது சரியில்லையென்றாலும், அங்கு சண்டையிடுவதிலும் நீங்கள் சிறிது யோசிக்க நேரிடும். ஆனால் பலஹீனர்கள், உதவியற்றவர்கள் பேரில் நீங்கள் தம் இஷ்டப்படி கோபம் கொண்டால் பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்! ஒரு வீட்டில் விதவைப் பெண் ஒருவள் இருக்கிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவளை மாமியார் மாமனார் இரவும் பகலும் நிந்திப்பார் கள். என்றாவது ஒரு நாள் சிறிது நோய்வாய்ப்பட் டாலும் 'ஏமாற்றுகிறாள், வேலைக்குப் பயந்து பாசாங்கு செய்கிறாள்' என்று சொல்வார்கள். அவளுக்கு என்ன கஷ்டம் என்று யாரும் கேட்பதில்லை. பலஹீனர்களை இம்மாதிரித் துன்பப் படுத்துவதில் தன் சக்தியைச் செல விடுவது அச் சக்தியைத் தவறான முறையில் செலவிடுவ தாகும்

உன்னிடம் உள்ளவை யாவும் ஏழைகளின் பொருட்டு அநாதைகளின் பொருட்டு, துன்பப் பட்டோர்களின் பொருட்டே உள்ளன என்பதை நன்கு நினைவில் வைத்துக் கொள். தன்னுடைய சக்தி, பொருள், வாழ்க்கை இவற்றை எல்லோருக்கும் கொடுத்து, பிறகு எஞ்சியதைக் கொண்டு தான் வாழ வேண்டும். இம்மாதிரியாக எஞ்சு வது தான் '**यज्ञावशेष**'—வேள்வியில் எஞ்சிய வஸ்துவா கும். கண்ணபிரான் கீதையில் இதை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்—

**यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।**
**भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥** (3.13)

"வேள்வியில் எஞ்சிய பிரசாதத்தை உட்கொள்ளும் மாந்தர்களது எல்லாப் பாவங்களும் நசித்து அவர்கள் பாவங்களினின்றும் விடுபட்டவர்களாகிறார்கள். ஆனால் எவர்கள் தமக்காகவே உணவைச் சமைத்துச் சாப்பிடுகிறார்களோ அவர்கள் பாவத்தையே சாப்பிடுபவர்கள் ஆகிறார்கள்."

**'अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ।'**

"தன் புலனுக்குச் சுகம் கொடுப்பதிலேயே வாழ்க்கை நடத்துபவன் பாவமயமானவன். அவன் பாவத்தையே சாப்பிடுகிறான். அவனுடைய வாழ்வு வீணே."

ஆதலால் பாவத்தைச் சாப்பிடாதீர்கள். எல்லோருக்கும் அவரவர்களுக்கு உரித்தானதை வழங்கி, அவரவர்களுடைய உரிமையைக் கொடுத்து விட்டு எஞ்சியதைக் கொண்டு தன் வாழ்நாளைக் கழியுங்கள். அதுதான் அமிர்தம். அதுதான் வேள்வியில் எஞ்சிய புனித உணவு. என்னிடம் உள்ள சொத்து என்னுடையது தானே என்று ஒரு பொழுதும் நினைக்காதீர்கள். நீங்கள் அதைக் காப்பாற்றும் டிரஸ்டி மட்டுமே; அதை ஈசுவரனுடையதாகக் கருதி ஈசுவரனுடைய சேவையில் முடிந்தமட்டில் செலவு செய்து கிருதார்த்தர் ஆகுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் பகவானுடைய நேர்மையான ஊழியர்களாவீர்கள். அச்சொத்துக்களைத் தனதாகப் பாவித்துத் தனக்கு உபயோகித்துக்கொண்டால் திருடர்களாவீர்கள், பாவிகளாவீர்கள். அதற்கு உங்களுக்குத் தகுந்த தண்டனையும் கிடைக்கும். எங்கெல்லாம் அந்தச் சொத்து உபயோகப்படக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமோ அங்கெல்லாம் அதை

ஆடம்பர மில்லாமல், கர்வங்கொள்ளாமல், எளிதான முறையிலும் நேர்மையுடனும் ஏழைகளுக்குச் செலவு செய்யுங்கள். ஏழையை, எளியவனைச் சிறிதளவும் அலட்சியப் படுத்துவது அவனிடம் கடுஞ் சொற்கள் சொல்வது அவனது உள்ளத்தைத் தொளைக்கும் புண் ஏற்படுத்துவதாகும்.

செல்வந்தனை நீ முதலாவது அலட்சியம் செய்ய மாட்டாய், ஒருக்கால் நீ ஒருவன் அலட்சியம் செய்தாலும் அவனுக்கு மதிப்புக் கொடுப்பவர் பலர் கிடைப்பார்கள். அவன் உன் சொற்களை மதிக்க மாட்டான். யாராவதொரு ஏழை உன்னிடம் வரும்பொழுது நீ அவனை அவமதித்து வீட்டை விட்டு வெளியேற்றினால் சாக்ஷாத் கடவுளையே வெளியேற்றினதற்கு ஒப்பாகும். ஏனென்றால் எங்கெல்லாம் ஏழ்மை உள்ளதோ அங்கெல்லாம் கடவுள் உறைகின்றார், ஆகையால் எங்கெல்லாம் எளியோர் கிடைப்பாரோ அங்கெல்லாம் அவர்களுக்கு விசேஷமாகத் தொண்டு செய். அவர்களுக்கு ஏதாவது கொடுக்கும் போது நீ அவர்களுடைய வஸ்துவையே அவர்களுக்கு கொடுப்பதாக நினைத்துக் கொள். '**त्वदीयं वस्तु गोविन्द तुभ्यमेव समर्पये**' என்ற எண்ணத்துடன் அந்த வஸ்து உன்னுடையது அல்ல என்று நினைத்துக் கொள். அவனது பொருளை அவனிடமே அர்ப்பணிப்பதாகக் கருதிக் கொள். யாருக்காவது, அதிலும் முக்கியமாக ஏழை எளியோர், துன்பமுற்றோர், நாதியற்றோர், சக்தியற்றோர் இவர்களுக்கு அவமதிப்பு ஏற்பட்டுவிடும்படியான யாதொரு செயலும் மெய், வாக்கு, சரீரம் இவைகளால் ஒரு

பொழுதும் செய்யாதே. எளியோர், சக்தியற்றோர், நாதியற்றோர், இவர்களுக்கு மதிப்புக் கொடுப்பது ஈசுவரனுக்கு மதிப்புக் கொடுப்பதற்குச் சமமாகும் என்பதை நீ முற்றிலும் நம்பு. எளியோனிடம் மரியாதையும் இனிமையும் கலந்த தொனியில் பேசுவது அவனை மிகவும் கௌரவிப்பதாகும்; அவனுடைய உள்ளத்துக்குக் குளிர்ச்சியும் சுகமும் அளிப்பதாகும். பகவான் சியாமசுந்தரர் விதுரருடைய வீட்டிற்குச் சென்றார். இதனால் பகவானுக்கு என்ன வந்தது, விதுரருக்குத்தான் கௌரவம் கிட்டியது! 'பகவான் பீஷ்மர் வீட்டிற்குச் செல்லவில்லை, கௌரவர் தலைவன் துரியோதனன் வீட்டிற்கும் செல்லவில்லை, மற்ற அரசர்கள் வீட்டிற்கும் செல்லவில்லை. என் வீட்டிற்கல்லவோ வந்தார்' என விதுரருக்கு எவ்வளவு பேரானந்தம் ஏற்பட்டது!

பெரிய மனிதர்களாகிய நீங்கள் எங்காவது வெளியே சென்றால் உங்களுக்கு உபசாரம் செய்து வரவேற்பவர் பலர் கிடைப்பார்கள். ஆனால், அங்கே நீங்கள் ஒரு ஏழையின் வீட்டில் தங்கினீர்களேயானால் அந்த ஏழைக்கு மிகவும் ஆனந்தம் ஏற்படும். அவன் இவ்வளவு பெரிய மனிதர் தன் வீட்டிற்கு வருவார் என்று எதிர்பார்த்தே யிருக்க மாட்டான். காலஞ்சென்ற ஸ்ரீ சிவப்ரகாச குப்தா அவர்கள் (காசியைச் சேர்ந்த ஓர் பெரிய அறிவாளி, பெரிய தேச பக்தர்) தான் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் கோரக்பூருக்கு வந்தார். நான் அவரிடம் உங்களுக்கு தேக நிலை சரியாயில்லையே, நீங்கள் என் இங்கு வந்தீர்கள் எனக் கேட்டேன். அவர் அதற்குக் கீழ்க்

கண்ட மிக அழகான பதில் கொடுத்தார்—'நானே சாகும் தருவாயிலிருக்கிறேன். எனது சில சுற்றத்தார் இவ் வூரில் இருக்கின்றனர். அவர்களில் பலர் போதிய பண வசதியற்றவர்கள். அவர்களில் சில வயோதிக மாதர் களும் இருக்கின்றனர். நான் அவர்களையெல்லாம் தரி சித்தாகவேண்டும். ஆகையால் தான் இங்கு வந்தேன்' என்றார்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கும் குசேலருக்குமிடையே இருந்த நட்பில் வாஸ்தவமாக முக்கியமான விஷயம் யாது? கிருஷ்ணனும் குசேலரைப் போலவே இருந்திருந்தால் ஒன்றும் கவனிக்கதக்க விஷயம் இருந்திருக்காது. ஆனால் அவரோ ராஜாதிராஜன் (பகவான் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்), அவர் ஒரு ஏழையின் பாதங்களைக் கழு வினார், அவனது 'சரணாம்ருதத்தை' உட்கொண்டார். அந்தச் சரணாம்ருதத்தை அரண்மனை முழுவதிலும் தெளித் தார், அவனது கால்களைப் பிடித்துவிட்டார், அவனை மார் போடு தழுவிக்கொண்டார். இதுதான் பெருமை பொருந்திய விஷயமாகும். இந்தப் பெருமை அவருடைய பெரிய ஐசுவரியத்தால் அல்ல, அவர் ஏழையை மார்போடு அணைத்துக்கொண்டு அவனிடம் காட்டிய மரியாதை, அன்பு, சிநேகம் இவற்றினால் ஏற்பட்டதாகும்.

ஏழைகளுடைய வாழ்க்கையோடு சேர்க்கை ஏற்படு தல், அவர்களோடு இருப்பதில் ஆனந்தம் உண்டாவது— இது மஹத்துவம் பொருந்திய விஷயமாகும். ஏதாவதொரு ஏழையின் கண்ணீரை நீங்கள் துடைத்தீர்களானால், யாரை யாவது வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றினால், மூழ்குபவனைக்

காப்பாற்றினல் இது மஹத்துவம் பொருந்திய விஷயமாகும். உங்களிடம் வர லஜ்ஜைப்படும், வந்து ஏதாவது கேட்க வெட்கப்படும் கிருஹஸ்தனை நீங்களே தேடிப் பிடித்து அவனுக்குத் தேவைப்படும் உதவி அளியுங்கள், அவனுக்கு வேண்டிய துணிகள் கொடுங்கள். அவனுக்குத் தெரியாமலே உதவி புரிவது நல்லது, ஏனென்றல் அவனுக்குத் தெரிந்தால் அவன் மனக் கஷ்டம் அடையக்கூடும். தூர இருந்தபடியே பேசாமல் அவனுடைய நிலைமையைக் கவனித்து அவனது தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

எனக்குத் தெரிந்த ஓர் நண்பர் இருக்கிருர். அவருடைய பொருளாதார நிலைமை சரியாயில்லை. அவருக்குக் கடந்த மூன்று வருஷங்களாக ஒவ்வொரு மாதமும் நூறு ரூபாய் கிடைக்கிறது, ஆனல் யார் அதை அனுப்புகிருர்கள் என்று அவருக்கே தெரியாது. இம்மாதிரி அனுப்பிவரும் அந்த நபரை நான் மிகவும் உயர்ந்த மனிதராகக் கருதுகிறேன். இக் நாட்களிலோ, முதலில் உதவி அளிக்கப் போவதாக விளம்பரப்படுத்தப்படுகிறது, பிறகு உதவி செய்யப்படுகிறது. இது வெறுக்கத்தக்க விஷயமாகும். நாம் நமது சொந்தத் துன்பத்தைப் போக்கிக்கொள்வதில் ஈடுபடுவதுபோலவே பிறருடைய துக்கத்தைப் போக்குவதிலும் ஈடுபடுவதுதான் நியாயம். தன் துன்பங்களைப் போக்கிக்கொள்வதில் யாராவது பெருமைப்படுவதுண்டா? அதைத் தனக்குச் செய்துகொண்ட நன்றியாகக் கருதிக் கொள்வார்களா? வெள்ளம் வரும்போது நாம் நமது குடிசையிலுள்ள சாமான்களை வெளியே பத்திர

மான இடத்துக்கு எடுத்துச் செல்லுவோமானால் இதில் பெருமைப்படவேண்டிய விஷயம் என்ன இருக்கிறது? இப்படிச் செய்யாமல் இருந்திருக்க முடியாது. இதே மாதிரி, ஏழைகளுக்குத் தொண்டு செய்துவிட்டு மனதில் கொஞ்சமும் கர்வமும் அகங்காரமும் கொள்ளாமல் இருக்கவேண்டும். நம்முடைய தொண்டு யாரையும் வெட்கித் தலைகுனியவைப்பதாக இருக்கக்கூடாது என்பதை கவனத்தில் வைத்துக்கொள். 'நான் ஏழை, உதவி பெறவேண்டிய நிலையில் இருக்கிறேன், இவர் எனக்கு உதவி செய்பவர்' என்று அவன் நினைக்கத் தூண்டும்படி நாம் நடந்துகொள்ளக்கூடாது. மனிதன் சுயகௌரவம் உள்ளவனாக இருந்து, அவனுடைய நிலைமை கெடத் தொடங்குமானால் அவன், 'ஹே கடவுளே! என்னைப் பிறரிடம் கை நீட்டவேண்டிய நிலைமையில் வைக்காதே' என்றுதான் அவன் கடவுளிடம் வேண்டிக்கொள்கிறான். யாரைப்பற்றியும் நீ இவன் என்னுடைய உதவியால்தான் வாழ்கிறான் என்று எண்ணம் கொள்ளாதே. வேறு யார் மூலமாகவும் ஜாடையாகக் கூட அவனுடைய துக்கத்தில் நீதான் உதவி புரிந்ததாகத் தெரிவிக்கச் செய்துவிடாதே. இதைக் கேட்டு, அவன் நல்ல மனிதனாயிருந்தால் நன்றியறிதல் உள்ளவனாக இருப்பான் என்பது வாஸ்தவம்தான்; ஆனால், கூடவே, நீங்கள் என்ன முயற்சி செய்தும் நீக்க முடியாததோர் புண் அவனுடைய மனதில் ஏற்படும். யாருக்காவது சேவை செய்யப்போய், அவனுடைய சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்காதீர்கள்; அவன் தன்னைப்பற்றியே மரியாதைக் குறைவாக நினைத்துக்கொள்ளும்படிச் செய்துவிடாதீர்கள். அவனுடைய மனோநிலையை ஒருபொழுதும் வீழ்த்தாதீர்

கள். யாராவது ஒரு ஏழைக்கு ஏதாவதொரு பொருள் கொடுக்கும்பொழுது அவன் தன்னுடைய வஸ்துவைத் தான் எடுத்துக்கொள்கிறான் என்று அவனுக்கு வலியுறுத் துங்கள். அல்லது, மிகவும் ரகசியமாகவும் கவுரவத்துட னும் அவனுடைய உரிமையை உணர்த்தி அவனுக்குத் தொண்டு புரியுங்கள்; அவன் சாக்ஷாத் கடவுளேதான். நான் கடவுளுக்குத் தொண்டு புரிகின்றேன் என்று நீங் கள் நினைக்கத் தொடங்குவீர்களானால், அம்மாதிரித் தொண்டினால் நீங்கள் 'பகவத் ப்ராப்தி' அடைவீர்கள்; மோக்ஷமடைவீர்கள்.

நமது சாஸ்திரங்கள் சொல்கின்றன—'உணவு அருந்த உட்காரும்போது யாராவது வந்துவிட்டால், அவர் யாராயிருந்தாலும் சரி, என்ன ஜாதி, என்ன குலம் என்று கேட்கவேண்டியதில்லை, அவரைக் கடவுளின் ஸ்வ ரூபமாக நினைத்து அவருக்கும் உணவு அளியுங்கள்.' இதன் பிரகாரம், உங்களிடம் யார் வந்தாலும் உங்கள் சக்தியளவு அவருக்குச் சேவை செய்யுங்கள்.

பல ஜனங்கள் 'இம்மாதிரிச் செய்வதனால் பல பிச்சைக்காரர்களை நாம் சிருஷ்டித்துக் கொண்டிருக் கிறோம்' எனச் சொல்கிறார்கள். இது வெறும் வார்த்தை, கொடுக்கும் எண்ணம் இல்லாதவர்களுடைய வாதம். முதலாவது, தனக்குத் தேவை இல்லாமலேயே யாசிக்க வருபவர்கள் மிகவும் குறைவாக இருப்பார்கள்; அப்படி ஒருக்கால் தேவையில்லாதவர் யாசித்தாலும் அதனால் உங்களுக்கு யாதொரு நஷ்டமும் கிடையாது; ஈகை யால் உள்ள லாபம் உங்களுக்குக் கிடைக்கவே கிடைக் கும்.

உனக்குக் கிடைக்கும் சாதனங்களை ஏழை எளியோரின் சேவையின் பொருட்டு ஈடுபடுத்துவது கடமையெனக் கருதாவிடில், உன் மரணம் சம்பவித்த பிறகு நீ உனது சரீரத்திலிருந்து வெளிப்பட்டு என்ன பார்ப்பாயென்றால், உனது பேழையை யாரோ திறக்கிறார்கள், நீ ஒன்றும் செய்ய முடியாதவனாயிருக்கிறாய்; உனது பொருள் மற்றவர் கையில் போய்விடும். ஆனால் நீ ஒன்றும் செய்ய முடியாது, ஏதும் வழியற்றவனாக இருந்து விடுவாய். ஆகையால் நீ உனது எல்லாச் சொத்தையும் முதலிலேயே கடவுளுடையது என அர்ப்பணித்துவிட்டு அதன் பேரிலிருந்து தன் உரிமையை நீக்கிக்கொள். உன் பொருளுக்கெல்லாம் அவனே அதிகாரி என நினை. 'विश्व' பிரபஞ்சம் என்பது பகவானுடைய பெயராகும். 'விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில்' முதன் முதலில் 'विश्व' என்ற பெயரே வந்துள்ளது. ஆகையால், உலகத்தில் எங்கெல்லாம் பொருள்க் குறைவு இருக்குமோ, பொருள்த் தேவை ஏற்படுமோ அங்கெல்லாம் தேவையான வஸ்துக்கள் அனுப்பு. யாருக்குப் பேசத்திறமை இல்லையோ அவன் சார்பாக நீயே பேசு; யார் பயமடைந்திருக்கிறானோ அவனுக்கு அபயம் அளி; யாருக்கு பந்துக்கள் இல்லையோ அவர்களுக்கு நீயே பந்துவாக ஆகி விடு. கடவுளே இந்த எல்லா ரூபத்திலும் வந்து உன்னிடம் உன் பொருளைக் கேட்கிறார். இவ்விதம் எளியோருடைய, அவர்கள் மூலமாகக் கடவுளுடைய தொண்டில் தன் உடைமை யாவற்றையும் நல்ல வழியில் செலவிடு. யாரையும் ஒரு பொழுதும் துன்புறுத்தாதே. பல தடவைகளில் மனிதன் தவறுதலாகவே பிறருக்குத்

துன்பம் விளைவித்துவிடுகிறான். ஆகையால் மிகவும் கவனமாயிரு.

யாராவது திருடுவதைக் கண்டு நீ அவனிடம் சென்று சினேகப் பான்மையில் சந்தித்துக் கேட்பாயானால் அவன் எவ்வளவு நாளாக அன்ன ஆகாரமின்றி இருந்ததனால் திருடப்புகுந்தான், அவன் எவவளவு பரிதாபமான நிலையில் இருக்கிறான் எனத் தெரியவரும். ஒருவன் ஒரு வீட்டில் இரவு வேளையில் புகுந்து திருடச் சென்றான். அவன் வேறு ஒன்றும் திருடவில்லை, வெறும் உணவுப் பொருள் மட்டும் திருடிக் கொண்டிருந்தான்; அவனுடைய கண்களிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது. வீட்டின் சொந்தக்காரர் விழித்துக்கொண்டார். அவர் அவனிடம் சென்று, 'ஏனப்பா, ஏன் அழுகின்றாய்?' எனக் கேட்டார். பரிவுடன் அவர் கேட்ட கேள்வியைக் கண்டு அவன் இன்னும் பலமாக அழத் தொடங்கினான். அவன் சொன்னான், 'நானும் எனது குடும்பத்தாரும் வெகு நாட்களாகப் பட்டினி, வேலை தேட மிகவும் முயற்சி செய்தேன், எங்கும் கூலிவேலை கூடக் கிடைக்கவில்லை. பசியால் என் பிராணனும் எனது குழந்தைகளின் பிராணனும் துடித்துக் கொண்டிருக்கிறது. வேறு வழியின்றி நான் உங்கள் வீட்டில் திருட நிச்சயித்தேன். பல தடவை உங்கள் வீட்டுக்கு வந்தேன், ஆனால் தைரியம் வரவில்லை. வேறு வழியே தென்படாததால் இன்று ஆகாரம் திருடத் துணிந்து வந்துவிட்டேன். நான் திருடன், என்னை சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுங்கள்' என்றான். அந்த மனிதர் மிகவும் அன்போடு 'சகோதரா! இது உன்னுடைய வீடுதான். நீ

உனது குழந்தைகளை அழைத்துக்கொண்டு இங்கேயே வந்து இரு' என்று சொன்னார். அவருடைய இந்தப் பரிவும் நல்லெண்ணமும் பசியால் வாடும் அந்த மனிதனுடைய மனதை எவ்வாறு வசப்படுத்தியிருக்கும், அவனுடைய மனதுக்கு எவ்வளவு சுகமும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருக்கும்! அந்தச் சுகம் பெரும் பணம் கொடுத்துக்கூட ஒருவருக்கும் அளிக்கப்படமுடியாது. இம்மாதிரி ஏழைகளின் மனதில் புகுந்து அவர்களுடைய துக்கத்தை, அவர்களுடைய நிலையிலேயே தன்னை இருத்திக்கொண்டு அனுபவித்துப் பாருங்கள். அந்த நிலையில் நாம் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இம்மாதிரியான விபத்து நமக்கு ஏற்பட்டிருந்தால் நாம் என்ன செய்திருப்போம்?

சமூகத்தில் ஒரு பக்கம் ஜனங்கள் பசியால் வாடுகிறார்கள், துணிகள், வைத்திய உதவி, படிப்பு வசதி இவைகளின்றித் துடித்துக் கொண்டிருக்கின்றனர், மற்றொரு பக்கத்தில் பணத்தை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறார்கள், வீணாகச் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் தான் 'கம்யூனிஸம்' வருகிறது; இதே நிலை நீடிக்குமானால் அது வரத்தான் வரும். பல குற்றங்குறைகள் நிறைந்த கம்யூனிஸத்தால் தொல்லையே அதிகரிக்கும் என்பது ஒருபுறம் இருக்கட்டும். நாட்டின் வருவாய் சரியானபடி பங்கிடப்படாவிட்டால் அதிருப்தி வளரத்தான் செய்யும். ஒரு மனிதனிடத்தில் பல பெட்டிகளில் உடைகள் நிரம்பி இருக்கின்றன, அவனிடம் பெரிய தானியக் களஞ்சியம் இருக்கிறது. ஆனால் அவனுடைய

வீட்டிற்கு அடுத்த வீட்டிலேயே, அவனைப்போலவே உருவம், நிறம், கைகால், அங்க அவயவங்கள் படைத்த மற்றோர் மனிதனும் அவனது குழந்தைகளும் ஆகாரமின்றித் துடிக்கின்றனர், அழுகின்றனர். உடுத்துவதற்குப் போதுமான துணிகூட அவர்களிடம் கிடையாது. இது சமூகத்தின் பாவமாகும். இந்த மாதிரியான நிலைமையில் யாரிடம் எல்லாம் நிறைய இருக்கிறதோ அவன் அந்த ஏழையையும் அவனுடைய குழந்தைகளையும் கஷ்டத்திலிருந்து காப்பதே அவனுடைய கடமையாகும். அம்மாதிரி ஏழைகளைக் காப்பாற்றிய பிறகு எஞ்சுவதைக் கொண்டே தான் சாப்பிடவேண்டும். சமூகத்தில் யாரிடம் என்ன இருந்தாலும் சரி, பணம், பொருள், நிலம், கல்வி, புத்தி, புகல் எல்லாம் அவை இல்லாத, தேவைப்பட்டவர்தளுக்குக் கொடுத்து விடவேண்டும். இம்மாதிரி நடக்காவிட்டால், ஏற்றத் தாழ்வு அதிகரித்துக்கொண்டே போகுமானல் அதன் பலன் மிகவும் பயங்கரமானதாக இருக்கும்.

துன்பமுற்ற மனிதனைப் பார்த்து 'நீ பெரிய பாவம் செய்தாய், அதன் பலன் அனுபவிக்கிருய் என்பதும்—ஒருவனுடைய ஒரே மகன் இறந்ததும் 'நீ பெரிய பாவம் செய்தவன், ஆதலால் தான் உன் மகன் இறந்துவிட்டான்' எனக் கூறுவதும் மிகவும் குரூரமான செயலாகும். இம்மாதிரிச் சொற்களால் அவனுடைய மனது புண்படும். அவன் தன் பாவத்தின் பலனுகவே கஷ்டம் அனுபவிக்கிருன் என்பது வாஸ்தவம் தான்; ஆனுல் உனது கடமை என்னவெனில் உன்னிடம் உள்ள சக்தி, வசதிகள் யாவற்றையும் கொண்டு அவனுடைய புண்ணை ஆற்றி

அவனுடைய கண்ணீரைத் துடைத்து அவனுக்கு ஆறுதல் கூறவேண்டும். அவனிடம் அன்போடு பழகி, அவனைத் தேற்றி எம்முறையில் அவனுக்குத் தைரியமும் மகிழ்வும் ஏற்படுத்த முடியுமோ அவை யாவும் செய்யவேண்டும். அவனுடைய துக்கத்தை ஒரு சிறிதளவாவது நீ குறைக்க முடிந்தாலும் நல்லது தான்; ஆனால் நீ அவனைப் புறக் கணித்து, தர்மம் நீதி இவைகள் பேசி அவனுக்கு உதவி புரிவதைத் தட்டிக் கழித்தாயானால் அவனுடைய வாயி லிருந்து சாபச் சொற்களே வரும். அவன், 'இவரிடம் பணம் இருக்கிறது, எல்லா வசதிகளும் இருக்கின்றன; என்னிடமும் இவை யெல்லாம் இருக்குமானால் இவர் இப் படிக் கூறியிருந்திருக்க மாட்டார்' எனச் சொல்லுவான். ஆகையால் யாருடைய உள்ளத்தையும் எந்த விதத்திலும் புண் படுத்தாதே. இல்லாவிடில் அவனுடைய வாயிலிருந்து வசைச் சொற்கள், சாபச் சொற்கள் வெளிவரும். ஆனால், நீ அவனுடைய கண்ணீரைத் துடைப்பாயானால், அவனரு கில் அமர்ந்து ஆறுதல் கூறி, அவனோடு கூட அவன் மாதிரியே ஆகாரம் புசித்து அவனுடைய துக்கத்தில் பங்கு கொள்வாயானால் அவனுடைய வாயிலிருந்து நிரம்ப வாழ்த்துக்கள் வெளிவரும். ஆகையால் முடிந்த மட்டில் முழுச் சக்தியோடு பிறர் துக்கத்தைப் போக்கவேண்டும். இது மனித தர்மத்தின் முதல் கடமை யாகும். பிறர் இன்னலைப்போக்குவது பெரிய புண்ணியமாகும், பிறருக்குத் தீங்கு இழைப்பது பெரிய பாவமாகும். ஆகையால் ஏழைகளை ஒரு பொழுதும் துன்புறுத்தாதே. இதை நன்கு கவனத்தில் வைத்துக்கொள்.

நல்ல தேக சுகமுள்ள மனிதன் பேரில் கை பட்டால் ஒன்றும் ஏற்படாது, ஆனால் சிரங்கு உள்ளவன் பேரில் கைபட்டால் அவனால் வலியைச் சகிக்க முடியாது இதே மாதிரி துர்த்தசையிலுள்ள மனிதனை மேலும் துன்புறுத்தாதே; அவனுடைய மனதுக்குத் துன்பம் விளைவித்துக் கிலேசத்தை மேலும் அதிகரிக்காதே; ஆனால் அவைகளைக் குறைக்க முயற்சி செய். வலியைக் குறைக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை, அவனுடைய வார்த்தைகளைக்கேட்டு அவனுடைய மனதின் பாரத்தைச் சிறிதளவாவது நீக்கு. ஏழை எளியவர்களுக்கு உதவி புரிய முடியாவிட்டாலும் பரவாயில்லை, மேலும் துன்புறுத்தாதே. வீட்டில் விதவைச் சகோதரி இருப்பாளானால் அவளை விசேஷமாக நன்கு கவனி. அவள் பாவம், ஏற்கனவே துக்கமடைந்துள்ளவள். அவளை ஏதாவது சொல்லி அவளுடைய துக்கமாகிய நெருப்பில் இன்னும் எண்ணெயை ஊற்றினால் மிகவும் மனக் கஷ்டப்படுவாள். யாரிடமாவது வீடு வாசல், நிலம், பணம் முதலியன இல்லாவிட்டால் அவ் விஷயத்தை ஞாபகப் படுத்தி நீ ஏதாவது சொன்னால் அவனது மனதில் கூரம்பு பாய்ந்தது போலிருக்கும். அவன், ' என்னிடம் ஒன்றுமில்லை, நான் ஏழை; என்னை யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், என்னை அவமரியாதைப் படுத்தலாம், நான் ஒன்றும் வாய் திறக்க முடியாது' என்று நினைப்பான். அவன் கடவுளின் முன்னால் 'ஹே கடவுளே! ஹே பிரபு! நீ என் பேரில் கருணை புரிய மாட்டாயா?' எனக் கதறுவான். இப்பேர்ப்பட்ட துர்ப்பாக்கியசாலிகளுக்கு நீ உதவியாளனாக ஆகி அவர்களுக்குப் புகலிடம் அளி. நீயும் அவர்களுடைய ஆத்மாவோடு

கலந்து அவர்களுடைய துக்கங்களை அனுபவி. ராஜா ரந்திதேவர் சொன்னார்:—

न कामयेऽहं गतिमीश्वरात् परा-
मष्टर्द्धियुक्तामपुनर्भवं वा ।
आर्तिं प्रपद्येऽखिलदेहभाजा-
मन्तःस्थितो येन भवन्त्यदुःखाः ॥

(பாகவதம் 9-21-12)

'நான் பகவானிடமிருந்து அஷ்ட சித்திகளோடு கூடிய பரமகதி விரும்பவில்லை. மோக்ஷம் எனக்கு வேண்டாம். நான் என்ன விரும்புகின்றேன் என்றால், எல்லாப் பிராணிகளினுடைய உள்ளத்திலும் இருந்துகொண்டு அவைகளுடைய எல்லாத் துன்பங்களையும் நானே அனுபவிக்க வேண்டும்; அதனால் வேறு எந்தப் பிராணிக்கும் துன்பம் ஏற்படாதிருக்கட்டும்.'

சிபிச் சக்ரவர்த்தி சொன்னார்—

न त्वहं कामये राज्यं न स्वर्गं नापुनर्भवम् ।
कामये दुःखतप्तानां प्राणिनामार्तिनाशनम् ॥

'துன்புற்றோர், இன்னலுற்றோர் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் யாவரும் சுகமடையட்டும். எனது ஸ்வர்க்கம் போகட்டும், மோக்ஷம் போகட்டும், இதைப் பற்றிப் பரவாயில்லை,' ஆனால் வாஸ்தவத்தில் இம்மாதிரியான ஜனங்களின் ஸ்வர்க்மோ மோக்ஷமோ போய் விடாது. பிறருடைய துக்கங்களைத் தன் துக்கங்களாகக் கருதி அவர்களுடைய துங்கங்களை விலக்க விரும்புவோர் **மஹாத்மாக்களிலும் பெரிய மஹாத்மா.**

துன்புற்றவர்களிடம் அவர்களுடைய துன்பத்தைப் பற்றி ஒருபொழுதும் நினைவூட்டாதே. ஒற்றைக் கண்ணனை ஒற்றைக் கண்ணன் என்று அழைக்காதே, விதவையை அவளது விதவைத்தனத்தைச் சுட்டிக் காட்டித் திட்டாதே, நோயுற்றவர்களை பலவீனப்படுத்தாதே, அவர்களுக்கு ஆறுதல் மொழி கூறு. நோயுற்றவனைப் பார்த்தால் 'உன் நோய் அதிகமில்லை, சீக்கிரம் குணமடைவாய்' என்று கூறு. அவனுடைய நாடியைப் பார்த்து 'அடே, உனக்கு நோய் அதிகமாயிருக்கிறது, டாக்டரிடம் காண்பி, எக்ஸ்ரே எடுத்துக்கொள்' என்று இம்மாதிரியெல்லாம் சொல்வாயானால் அவனுடைய நோய் இன்னும் அதிகமாகிவிடும். ஒருவரிடம் உள்ள குறைகளை ஞாபகப் படுத்துவது அவருடைய மனதை மேலும் துன்புறுத்துவதாகும். ஒருவன் தனக்கு ஏற்பட்ட குறைபாடுகளை மறந்துவிடும்படி முயற்சி செய். துர்த்தசையில் இருப்பவர்களோடு பரிகாசம் செய்யாதே. அவனுடைய துர்த்தசையைக்கண்டு அவனை நீ திட்டுவது, ஏளனம் செய்வது மிகவும் கெடுதல். அவனைக் காட்டிலும் அதிக துர்த்தசை உனக்கு எங்காகிலும் வந்துவிட்டால் என்ன செய்வது? நொண்டியை 'ஏ நொண்டி' என்று கூப்பிடாதே, எங்காவது உனது இரண்டு கால்களும் ஒடிந்துவிடப்போகின்றன. ஓர் விதவைச் சகோதரியை அம்மாதிரிப் பெயரிட்டு அழைத்து வரும் சுமங்கலிப் பெண் நாளை நமக்கும் இந்த துர்ப்பாக்கியம் வந்துவிடாமலிருக்கவேண்டுமே என்று பயப்பட வேண்டாமா? ஒருவனைப்பார்த்து 'ஏ தரித்திரனே!' என்று கூறுபவனே நாளை தரித்திரனாகமாட்டான் என்பது என்ன நிச்சயம்? யாரியமாவது உள்ள ஒரு குறைபாட்டைக்

குறித்துப் பரிகாசம் செய்பவனே அக்குறைபாட்டிற்கு இலக்காகக் கூடும். ஒருவன் மற்றொருவனைப் பார்த்து 'பாவம், ஏழை!' என்று சொல்லும்போது அப்படிச் சொல்லுபவன் மற்றவனைக் காட்டிலும் நல்ல ஸ்திதியில் உள்ளவன் என்ற எண்ணம் உதிக்கிறது; அவனிடம் உள்ள கர்வமே இங்கு தொனிக்கிறது. கடவுள் ஏழை பங்காளன். நாம் ஏழைகளுக்குத் தொண்டு செய்து அவர்களுடைய ஆசிமொழிகளைப் பெறுவோமானால் நமக்கு மங்களம் உண்டாகும். ஏழைகள் நம்மைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்களானால், உண்மையில் ஏழை பங்காளனை கடவுள் நம்மைத் தன்னுடன் வைத்துக்கொள்வார், நம் பேரில் சந்தோஷம் கொள்வார். யாராவதொரு தாயார் ஒருவனைப் பற்றி 'இவன் என் குழந்தையைக் காப்பாற்றினான், என் குழந்தையின் பசியைப் போக்கினான்' என்று தெரிந்துகொண்டால் அவள் அவனை மனதார வாழ்த்துவாள். இதே மாதிரித்தான் கடவுள் எல்லோருக்கும் தாய் போன்றவர். ஏழைகள் எல்லோரும் கடவுளினுடைய குழந்தைகள். அவர்களுக்குத் தொண்டு செய்து நாம் கடவுளை மகிழ்விக்கிறோம். அவர்கள் சந்தோஷமடைந்தால் அவர்களுடைய தாயான கடவுள் நம் பேரில் மகிழ்ச்சி கொள்வார். குழந்தைகளின் தாயாரிடம் ஏதாவது ஒரு நல்ல வஸ்து இருக்குமானால் தன் குழந்தையைக் காப்பாற்றியவர்களுக்கு அந்த வஸ்துவைக் கொடுத்துவிடுவாள். இதேமாதிரி பகவானும் தன்னிடமுள்ள மிக நல்ல வஸ்துவை நமக்குக் கொடுத்தருளுவார். ஆகையால், ஏழைகளுக்கும் துன்புற்றவர்களுக்கும், வியாதியுற்றவர்களுக்கும், விதவைகளுக்கும்,

நாதியற்றவர்களுக்கும், உதவிற்றவர்களுக்கும் உங்களால் எவ்வளவு தூரம் எந்தெந்த மாதிரி யெல்லாம் உதவி கிடைக்க முடியுமோ, அந்த விதத்திலெல்லாம் தன் சக்தி முழுவதும் செலவுசெய்து உதவியளியுங்கள். கொஞ்சமும் கர்வம் கொள்ளாமல் எளியோருக்குத் தொண்டு செய்து தன்யர்கள் ஆகுங்கள். நீங்கள் இம்மாதிரி ஏழைகளுக்குத் தொண்டு செய்தால் கடவுள் உங்களுக்கு கட்டாயம் எல்லா மங்களமும் அருளுவார்.

6896

श्रीहरिः

# सचित्र, संक्षिप्त भक्त-चरित-माला की पुस्तकें

सम्पादक—श्री हनुमानप्रसादजी पोद्दार

**भक्त बालक**—पाँच बालक भक्तों की कथाएँ, पृष्ठ ७२, सचित्र, मूल्य ।-)

**भक्त नारी**—पाँच स्त्री भक्तों की कथाएँ, पृष्ठ ६८, चित्र ६, मूल्य ... ।-)

**भक्त पञ्चरत्न**—पाँच भक्तों की कथाएँ, पृष्ठ ८८, चित्र २, मूल्य ... ।-)

**आदर्श भक्त**—सात भक्तों की कथाएँ, पृष्ठ ९६, चित्र १२, मूल्य ... ।-)

**भक्त चन्द्रिका**—छः भक्तों की कथाएँ, पृष्ठ ८८, सचित्र, मूल्य ... ।-)

**भक्त-सप्तरत्न**—सात भक्तों की कथाएँ, पृष्ठ ८६, सचित्र, मूल्य ... ।-)

**भक्त-कुसुम**—छः भक्तों की कथाएँ, पृष्ठ ८४, सचित्र, मूल्य ... ।-)

**प्रेमी भक्त**—पाँच भक्तों की कथाएँ, पृष्ठ ८८, सचित्र, मूल्य ... ।-)

**प्राचीन भक्त**—पन्द्रह भक्तों की कथाएँ, पृष्ठ १५२, चित्र ४, मूल्य ... ॥)

**भक्त-सौरभ**—पाँच भक्तों की कथाएँ, पृष्ठ ११०, सचित्र, मूल्य ... ।-)

**भक्त-सरोज**—दस भक्तों की कथाएँ, पृष्ठ १०

**भक्त-सुमन**—दस भक्तों की कथाएँ, पृष्ठ ११

**भक्त-सुधाकर**—बारह भक्तों की कथाएँ, पृष्ठ

**भक्त-महिलारत्न**—नौ भक्त महिलाओं की क

**भक्त-दिवाकर**—आठ भक्तों की कथाएँ, पृ

**भक्त-रत्नाकर**—चौदह भक्तों की कथाएँ पृष्ठ

ये बूढ़े-बालक, स्त्री-पुरुष—सबके [illegible] और शिक्षाप्रद पुस्तकें हैं। एक-एक प्रति अवश्य पास [illegible]।

पता—**गीता प्रेस, पो० गीता प्रेस (गोरखपुर)**